# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 24 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 24


## சிறந்த மருத்துவர்

பின்வரும் நிகழ்வானது மாற்கு 5 : 24-34 லிருந்து எடுக்கப்பட்டது.

இயேசு ஜனக்கூட்டத்திற்கு சென்று கொண்டிருக்கையில் அவருடைய சீஷர்கள் அவரைச் சூழ்ந்துநின்று ஜனங்கள் அவரை நெருக்காதபடிக்கு அவரை சுற்றிலும் தடைசெய்து நின்றுகொண்டிருந்தனர்.ஜனங்களுக்கு நடுவாக வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிற சிறுபிள்ளைகளின் சத்தமும் காதுகளில் தொனித்துக் கொண்டிருந்தது. ஜனக்கூட்டத்திற்குள்ளே ஸ்திரீகளும், புருஷர்களும் கூட தனக்குப்பின் பேசிக்கொண்டு வருகிற ஆரவாரசத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. முடவனான ஒரு மனிதன் கூட்டத்தை பின்தொடர முடியாமல், எல்லோருக்கும் பின்பாக இருந்தான்.எஜமானனாகிய இயேசுவை சந்திக்கும்படியாய் ஒரு தாய், ஜீரமாய்க் கிடந்த தன் பிள்ளையோடு வந்து அவரைத் தேடினாள்.

இவ்வளவு பெருங்கூட்டமான ஜனங்களுக்கு நடுவிலே ஒரு ஸ்திரீ தன்னுடைய காரியம் நிறைவேறும்படியாய் இயேசுவை நோக்கி வந்து கொண்டிருந்தாள். புதைந்துபோன கண்களும், மெலிந்த தேகமும், வெளிறிய நிறத்தோடு மறைமுகமாக அந்த பெண் எப்படியாவது திரளான ஜனக்கூட்டத்திற்கு மத்தியிலே அவரைத் தொட ஆவலாய் இருந்தாள்.அவள் 12 வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும் சற்றாகிலும் குணம டையாமல் அதிக வருத்தப்படுகிற பொழுது ஒருநாள் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு அவர் கிராமங்கள் தோறும் அநேக பிணியாளிகளையும், வியாதிக் காரரையும் சொஸ்தமாக்கினதை அறிந்து வைத்திருந்தாள். பிசாசுகளை துரத்து கிறதையும், முடவர்கள் நடக்கிறதையும் குருடர்கள் பார்வையடைகிறதையும் அறிந்து ஆச்சரியப்பட்டு விசுவாசத்தோடு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுவால் நான் குணமாவேன் என்று எண்ணினாள்.

இந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் இயேசுவே என்று சத்தமிட்டாள்.இப்போது அவள் அவரை கண்டாள்.ஆயினும் அவர் ஜனங்களுக்குள்ளே சூழப்பட்டு நின்று கொண்டிருந்தார்.உடனே நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக் கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

அவள் ஆச்சரியப்பட்டு மகிமையான தேவனுக்கு நன்றி செலுத்தும்படியாய் நிற்கையில், இயேசு திரும்பி பார்த்து நின்று சுற்றியிருக்கிற அனைவரையும் கண்டு " என் வஸ்திரங்களைத் தொட்டது யார் ? " என்று கேட்டார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி : "திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்க என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள்" இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்துதான் இதைக் கேட்டார்.



**" நான் அவருடைய வஸ்திரங்களை யாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் "**


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி<br>தெய்வீக சுகம் | ஒருநோக்கு செய்தி<br>தெய்வீக சுகத்தின் ஆசீர்வாதமும் நோக்கமும் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா?<br>ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ;19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17


**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து,நடுங்கி அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.இயேசு அன்போடும், இரக்கத்தோடும், அவளைப் பார்த்து, “ மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு” என்றார்.

இயேசுவின் வழி எவ்வளவு ஆச்சரியமும், அதிசயமுமானது, இயேசுவை விசுவாசித்து, ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு ஜனத்திற்கும் அவர் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து வந்தார்.இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய காரியங்களோடு மனுக்குலத்தின் சரீரம் மற்றும் மனரீதியான தேவைகளுக்காகவும் ஊழியஞ் செய்தார். படித்த வைத்தியர்களால் குணமாக்க முடியாத அந்த ஸ்திரீயின் வியாதியை குணமாக்கினார்.அவருடைய தெய்வீக குணமாக்குதலின் வல்லமையால் அவளுடைய சரீரத்திலே அற்புதம் கிடைத்தது. இயேசுவே சிறந்த நிபுணர்.அவருக்கு நன்றி. அவர் என்றுமே சிறந்த நிபுணர்.

இயேசுகிறிஸ்து இன்றும் குணமாக்கும் வல்லமையுடையவராக நம்மில் வாசம் செய்கின்றார். உடைந்த உள்ளத்தோடு நொறுங்குண்டவர்களாய் வியாதியோடிருந்து இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் அவரை நம்புவோர் அவருடைய வல்லமையால் நிச்சயமாய் குணமடைவார். பாவத்திற்கு அடிமைப்பட்ட ஆத்துமாக்களை மீட்கவும் சரீரப்பிரகாரமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விடுதலை கொடுக்கவும், கட்டுண்ட தம்முடையவர்களை மீட்கவும் அவர் விரும்பி ஊழியஞ் செய்தார். மருத்துவர்களுக்கும், மனநல நிபுணர்களுக்கும் மாற்று அல்ல இயேசு. மனிதனால் செய்யக்கூடாததும், செய்யமுடியாததும், நம் நினைவிற்கு அப்பாற்பட்டவரும், அதிசயங்களைச் செய்கிறவருமான ஜீவனுள்ள மெய்யான ஒரே தேவன் அவர். தேவனாலே கூடாத காரியம் என்று ஒன்றுமேயில்லை.நம்பிக்கையற்று, கைவிடப்பட்ட சூழ்நிலையில் இயேசுவின் கிருபையினால் தெய்வீக சுகமாக்குதலின் வல்லமை இருளை ஊடுருவிச் சென்று மாம்ச பெலவீனங்களை, வியாதியை நீக்கி, விடுதலை கொடுக்க வல்லவர்.

அந்த பெரும்பாடுள்ள ஸ்திரீ தன் ஆஸ்தியையெல்லாம் விற்று, தன் பெலனை இழந்து, காலந்தாழ்த்தப்பட்டும் கூட சரரத்திலே சுகம் கிடைக்கவில்லை.நாமும் கூட இயேசுவை அறிந்திருப்பதினால் தாமதிக்க வேண்டியதில்லை. நம்முடைய கஷ்டங்களையும், தேவைகளையும் அவரிடத்தில் ஒப்புக்கொடுப்போம்.நாம் நமக்கே செய் முடியாத ஒன்றை நமக்காக செய்யும்படியாய் அவர் நம்மை எதிர்பார்த்து காத்திருக்கிறார்.



## சபையிலே சில ஜனங்கள் சுகவீனங்களிலே கர்த்தரை நம்புவதில் சோர்ந்து போகிறார்கள் அவர்களை எப்படி தேற்றலாம்?

“ விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொளளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களை குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள் ” (ரோமர் 14 : 1).

தேவனுடைய பரிசுத்த மனுஷர்களைப் போன்றே நாமும் நம்முடைய சகோதர, சகோதரிகளை ஜெபத்திலே நினைவுகூரவும் அவர்களை குற்றப்படுத்தாதிருப்பேனாக

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க **www.thegospeltruth.org** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*
*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்:—*

**டபிள்யு.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார் (எபேசி 2 : 6-7).
இன்றும் கூட தேவவல்லமை அவருடைய கிருபையினாலே நம்மேல் அவர் பொழியச் செய்கிறார். நம் மீட்பர் இயேசுவால் அன்பும், இரக்கமுமாகிய அவருடைய ஐசுவரியத்தைப் பெற்றோம். இந்த இதழின் தலைப்பு தெய்வீக சுகமாக்குதல். நடைமுறையில் பார்க்கும்போது ஆதிகாலந்துவங்கி இதில் பல விவாதத்திற்குரிய காரியங்களுண்டு.ஆனால் இந்த இதழில் சந்ததி, சந்ததியான பிரசங்கங்களும் புரிந்துகொள்ளுதலுமல்லாது, வேதம் என்ன சொல்கிறது என்பதை மாத்திரம் குறிப்பிட்டுள்ளேன். ஏன் தேவசபையிலும் கூட, ஒரு போதகரும் மற்றொரு போதகருக்கும், ஒரு சந்ததியினருடைய சிந்தனைக்கும், மற்றொரு சந்ததியினருக்குமிடையே கூட இந்த கருத்துக்கள் நியமம் உபயோகித்தலில் சிறிதளவு மாறுபடும். ஆகவேதான் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, உண்மையாய் ஆவியானவருடைய பெலத்தால் நாங்கள் போதிக்கிறோம்.
தேவனுடைய சிங்காசனத்திலிருந்து புறப்படும் வல்லமை சுகமாக்குதலின் வல்லமையாய் வெளிப்படுகிறது. வாழ்வின் ஆபத்து நேரங்களில் அவரைப்பற்றும் விசுவாசத்தினாலே நான் தேற்றப்படுகிறதை உண்மையாய் உணர்ந்தேன்.இன்றும் கூட பலரால் சொல்லப்படும் பற்பல அற்புதமான வியக்க வைக்கும் அதிசயங்களை தேவன் அவர்கள் வாழ்வில் செய்ததை போல, என்னுடைய மரணப் படுக்கையினின்று, இருமுறை தேவன் என்னை விடுதலையாக்கினார். என்னுடைய எல்லா சுகவீன, பெலவீனங்களை அவர் மாற்றினார். சுவாச நோயினால் பாதிக்கப்பட்டு இடுக்கணில் இருந்த என் வாழ்வு அவ்வளவுதான் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்.ஆனால் பல வருட போராட்டங்களுக்குப் பின்பு தேவன் எனக்கு அற்புத சுகம் தந்தார்.அதேபோல ஜனங்களுக்குள்ளே பிசாசுகள் துரத்தப்பட்டு அவர்கள் விடுதலையடைவதை நான் என்னுடைய அனுபவத்திலே கண்டதுண்டு.

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு செய்த சரீரப்பிரகாரமான அற்புதங்களை எழுத வேண்டுமானால் இடம் போதாது. தெய்வீக சுகமளித்தல் என்பது காலஞ் செல்ல செல்ல கடந்து போகிற ஒன்றல்ல.அவர் மெய்யான தேவன்.அவருடைய செய்கைகளும் என்றும் மாறாதவையே

அதற்கான திறவுகோல் ஒன்றே. அது தேவனைப் பற்றும் விசுவாசம்.நான் பல நேரங்களில் தேவனால் சோதிக்கப்படும் போது, அவரிடத்திலிருந்து பதில் பெறாத நாட்களுண்டு.அதுபோன்ற சமயங்களில் தேவன் எனனை இன்னும் மாம்சீகமாக பெலப்படுத்தி சாட்சியாக நிறுத்துவார் என எண்ணிக்கொள்வேன். அவருடைய சுகமாக்குதலின் வல்லமை போன்றே அவருடைய ஞானத்தையும் நம்மால் விளங்கிக் கொள்ள கூடுமே?

எதற்காகவும் சோதிக்கப்படவும், காத்திருக்கவும் தயாராக இல்லாத ஒரு சந்ததியைக் கொண்ட காலக்கட்டத்தில் நாம் உள்ளோம். உண்மையாய் அவரைப்பற்றும் விசுவாசத்தோடு அவரை ஏற்றுக்கொண்டு, அவரை சேவிக்கும் நமக்கு மெய்யான சமாதானத்தை அவர் தரவல்லவர். உண்மையான நம்முடைய விசுவாசத்தின்படியே பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்துவார். ஆழமான ஆவிக்குரிய அனுபவத்திலே ஆவியானவர் ஒவ்வொருவரையும் வழிநடத்தும் விதம் என்பது நபருக்கு நபர் மாறுபடும்.

நாம் செய்யவேண்டியதும், செய்யக்கூடாதவையும் என்று தனித்தனியே குறிப்பிட்டு இங்கே எழுதவில்லை.ஆனால் மனுஷீக நியமங்களையோ அல்லது வேறு எதைச் சார்ந்த முடிவையும் சத்தியத்துக்கு மாறாக செய்ய கூடாது. தேவனை நம்பியிருக்கிற நாம் அவரைச் சார்ந்து வாழ கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்து, அவரை உங்கள் வாழ்விலே துணையாக கொண்டிருங்கள்.அவரை விட பெரிய பாதுகாவலரோ, மருத்துவரோ அல்லது உதவி செய்பவரோ இந்த உலகில் வேறு ஒருவரும் இல்லை.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*

# வேதபாட வழிகாட்டி

## தெய்வீக சுகமாக்குதலின் கோட்பாடுகள்



**வேத வாசிப்பு :** மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு,நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு. நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்.நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல்வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் - ஏசாயா 53 : 4-5.

**சுருக்கம் :** கிறிஸ்துவின் ஊழிய நோக்கம் இம்மனுக்குலத்தின் மாம்சீக மற்றும் மனரீதியான தேவைகளை சந்திப்பதாகும்.இயேசுகிறிஸ்துவின் ஊழியமும், அவரைத் தொடர்ந்து அப்போஸ்தலர்களின் ஊழியமும் சுகமாக்குதலின் ஊழியமாகவே இருந்தது. நம்முடைய பாடுகளையும், துக்கங்களையும் அவர் சிலுவையிலே சுமந்தார்.தேவபிள்ளைகளாகிய நாம் தேவஅன்பிலே நிலைத்திருந்து, அவருடைய தழும்புகளால் குணமாகும் வல்லமையை கர்த்தர் கொடுத்திருப்பது எவ்வளவு மேன்மையானது.

**I.கிறிஸ்துவின் சுகமாக்குதலைக் குறித்த தீர்க்கதரிசனம்**

A. ஏசாயா 61 : 1-2 இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும்

B. ஏசாயா 53 : 3-5 அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.

C. ஏசாயா 35 : 4-6 மேசியாவின் அற்புத அடையளங்களை குறித்த தீர்க்கதரிசனம்

**II.பூமியிலே கிறிஸ்துவின் சுகமாக்குதல் (தீர்க்கதரிசனம் நிறைவேறுதல்)**

A. மத் 8 : 16-17 ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

B. மத் 11 : 4-5 சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை அவர் சொஸ்தப்படுத்தினார் (மத்15 : 30-31)

C. மத் 4 : 23-24 சகல வியாதிகளையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார் (லூக் 4 : 40, லூக் 7 : 21)

D. அப்போ 10 : 38 பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும்

E. அப்போ 2 : 22 நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து

**III.அப்போஸ்தலர்களின் குணமாக்கும் வல்லமை**

A. மத் 10 : 1, 7-8 கிறிஸ்து தம்முடைய பன்னிரெண்டு சீஷர்களுக்கும் அதிகாரங் கொடுத்தார்.

B. லூக் 10 : 1,9 கர்த்தர் எழுபது பேரை நியமித்து, அவர்களை தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.

C. மாற் 16 : 17-20 விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்

D. அப்போ 5 : 12-16 அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக் குள்ளே செய்யப்பட்டது (அப்போ 6 : 8; 14 : 8-10;19:11-12; அப்போ 28 : 8)

**IV.சுகமாக்குதலின் வரம்**

A. 1 கொரி 12 : 4,9 வரங்களில் வித்தியாசங்கள் உண்டு.

B. 1 கொரி 12 : 29-31 எல்லோரும் ஒரே மாதிரியான வரங்களை உடையவர்கள் அல்ல.

**V.கிறிஸ்துவின் வல்லமை என்றும் மாறாதது**

A. எபி 13 : 8 இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

B. மத் 28 : 18 இயேசு : வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்

C. எபேசி 3 : 20-21 நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் செய்ய வல்லவர்.

**VI.பிணியாளிகளுக்கான அறிவுரை (அழை, எண்ணெய் பூசு, ஜெபி)**

A. யாக் 5 : 14-16 சபையின் மூப்பர்கள் பிணியாளிகளுக்கு எண்ணெய் பூசக்கடவர்

B. மாற் 6 : 12-13 அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்

C. அப்போ 28 : 8-9 கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான் (மாற் 16 : 18)

**VII.விசுவாசத்தின் தேவை**

A. மாற் 11: 22 தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்

B. மத் 13 : 58 அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

C. மத் 17 : 20-21 ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும்

**VIII.கிறிஸ்துவை தேடுவதின் பாக்கியம்**

A. சங் 103 : 2-3 உன் நோய்களையெல்லாம் குணமாக்கி

B. 2 நாளா 16 : 12 ஆசா தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான்

C. மத் 7 :7-11 கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்

D. 1 யோவான் 5 : 14 அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிகொடுப்பார்.

E. எபி 11 : 6 தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும்

F. 2 கொரி 12 : 7-9 என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்

**IX.கிறிஸ்துவின் அநாதி அன்பு**

A. மத் 14 : 14 திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி

B. மாற் 1 : 40-43 இயேசு குஷ்டரோகியை சொஸ்தமாக்கினார்

C. மத் 9 : 35-36 மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்துபோன ஜனங்கள்மேல் மனதுருகி

D. எபி 4 : 15-16 பரிதபிக்ககூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல்

**முடிவு :**

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென் - எபே 3 : 20-21.

# தெய்வீக சுகத்தின்
## ஆசீர்வாதமும், நன்மையும்

**கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் என்னை அனுப்பினார்.**



**“ வான மண்டலங்களில் ஆட்சி செய்யும் இயேசுவின் குணமாக்கும் வல்லமையால் எல்லாவிதமான நோய்களையும் சுகவீனத்தையும் நீக்கி விடுதலையளிக்க முடியும். ”**

லூக்கா 4 : 18 ல் சொல்லப்பட்டுள்ள கவனத்திற்குரிய வார்த்தை இது.ஓய்வுநாளிலே இயேசு ஜெபஆலயத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை வாசித்து சொன்னது. இயேசு கிறிஸ்துவின் தலையாய ஊழிய நியமங்களில் ஆத்தும குணமளித்தலே முக்கியமானது.நம்முடைய சொந்த பிரயாசங்களினால் அல்ல, அவருடைய கிருபையினாலே மனுக்குலத்திற்கு பாவமன்னிப்பாகிய மீட்பை அளித்து, அவருடைய விலைமதிப்பற்ற இரத்தத்தாலே இப்பாவ மனுக்குலத்தின் பிரிவினையை சரி செய்தார்.அடிமையாய் இருந்த நாம் மீட்கப்பட்டோம்.ஆவிக்குரிய குருட்டாட்டம் பிடித்திருந்த நம் கண்களுக்கு ஒளிவந்தது. நம்பிக்கை இழந்து, மனம் உடைந்து போனவர்களுக்கு நம்பிக்கையின் ஒளியாய் இரட்சிப்பை தந்தார் அவர்.

**கிறிஸ்துவைக் குறித்ததான ஏசாயா தீர்க்கதசிரிசியின் தீர்க்கதரிசனம்**
ஆச்சரியமான ஆவிக்குரிய குணமாக்குதலின் வல்லமை இயேசுகிறிஸ்து நமக்காக ஈந்தளித்ததை ஏசாயா 53 : 4-5 ல் மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;...நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்...அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.இதன் உட்பொருள் என்னவெனில், பாவத்திற்கு அடிமைப்பட்ட நம்முடைய ஆத்துமாக்கள் குணமடையும் விதமாக, அதற்கு முன்னேற்பாடாக ஏற்படுத்தப்பட்டதே இயேசுவின் சிலுவைப்பாடு.

மேலும் வேதவசனம் சொல்கிறது, அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டார்.பாடுகள் என்பது நம் சுகவீனம், நோய், இயலாமை, துயரம்.அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம் (ஏசாயா 35 : 4-6).

**கிறிஸ்து சுகவீனமானவருக்கு சுகமளித்தார்**
இயேசுகிறிஸ்து இந்த பூமியிலே ஊழியஞ்செய்யும்போது அவருடைய ஆவிக்குரிய குணமாக்குதலின் ஊழியத்திற்கும் மாம்சீக குணமாக்குதலின் ஊழியத்திற்கும் நிறைய ஒற்றுமை உண்டு.இயேசு தம்முடைய சீஷர்களிடம் நீங்கள் கேட்கிறதையும், காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்றார்கள் (மத் 11 : 4-5).

மத்தேயு 8 : 16-17 ல் ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட வார்த்தை கிறிஸ்துவால் நிறைவேறியது.பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் (மத் 4 : 23-24). பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கினார் (அப்போ 10 : 38).தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார் (அப்போ 2 : 22).

**சீஷர்கள்**
அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும்நீக்கவும் சீஷர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்( மத் 10 : 1). எழுபது பேரை நியமித்து பிணியாளிகளை சொஸ்தமாக்கும்படி சொல்லுங்கள் (லூக் 10 : 9). அப்போ 5 : 12 சொல்லுகிறது என்னவென்றால் அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது.கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் (மாற் 16 : 17-20).

**குணமாக்குதலின் வரம்**
பரிசுத்த ஆவியினாலே குணமாக்கும் வரங்களும் (1 கொரி 12 : 4-9). அவரவர்க்கு ஏற்றாற்போல் சுவிசேஷத்திற்கான வரங்களிலே வித்தியாசமுண்டு. தலையின்மீது கைகளை வைத்து குணமாக்கும் வல்லமை எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. 1 கொரி 12 : 29-30 ல் எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா?...எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களையுடையவர்களா? இதன் பதில் இல்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியான வரங்களல்ல, ஆனால் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவரவருடைய தகுதிக்கேற்ப வரங்களிலே பற்பல வித்யாசங்களோடு அருளியிருக்கிறார்.




**"அன்புள்ள நம் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழுவதுமாய் நம்மை நாம் ஒப்புக் கொடுப்பது நமக்கு மேன்மையே அல்லாமல் அது சுமையல்ல."**

ஆதி அப்போஸ்தல நாட்களில் நடந்த வல்லமையான உடனுக்குடனான அற்புதங்களும், மேசியா இயேசுகிறிஸ்து குணமாக்கும் வல்லமையும் இன்றும், இந்த சந்ததியினிடத்தில் குன்றிப் போகவில்லை இன்றும் அவர் சரீர,ஆவி,ஆத்துமாவின் மீட்பராக உள்ளார். எல்லா நோய்களையும், வியாதியையும் சுகமாக்க வல்லவர். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13 : 8). இயேசு : "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது...இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார் (மத் 28 : 18-20).

**தெய்வீக வெளிப்பாடு**
தேவபிள்ளைகளாகிய நம்முடைய பெலவீனங்கள், பாரங்கள், சோர்வுகளின்போது தேவகிருபை நம்மேல் இருக்கிறது. தேவனுடைய பரிசுத்த மனுஷர்களும் கூட இந்த பாடுகளுக்கும், நோய்களுக்கும் விதிவிலக்கல்ல. ஆயினும் கிறிஸ்துவின் வழியாக பெறப்படும் குணமாக்குதலை நாம் அடைகிறோம். தெய்வீக சுகமளித்தல் என்பது மனிதர்களின் திறமையினால் உண்டானதல்ல. முடியாத தையும், இயற்கைக்கு அப்பாற் பட்டதையும் மாற்றி அருளிடும் தேவன் நம் தேவன். தேவனை சேவிக்கும் நமக்கு அவர் தந்த ஈவு இது. இன்றும் கூட நம்மை குணமாக்கி சாட்சியாக வைத்துள்ளார்.

**சுகவீனமுள்ளோருக்கான அறிவுரை**
யாக்கோபு 5 : 14-16 ம் வசனத்திலே வியாதியாய் இருக்கிறவர்களுக்கான ஆலோசனை தரப்பட்டுள்ளது.உங்களில் யாராயினும் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்.கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

வியாதியாய் இருக்கிற ஒருவர் தன்னுடைய தேவனைப் பற்றும் விசுவாசத்தின் பேரில், சபை பெரியோரை அழைக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். அவர்களோ சீஷர்கள் மாற்கு 6 :12-13 ல் செய்ததைப் போல எண்ணெய் பூசி சொஸ்தமாக்க கடவர்கள். தேவனுடைய வல்லமை அந்த எண்ணெயிலே இல்லை.மாறாக தேவவார்த்தைக்கு கீழ்ப்படிந்து செய்யும் விசுவாசத்திலுள்ள முன் நடந்தது போல, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஜெபித்தபோது வியாதிக்காரர் சொஸ்தமடைந்த விதமாய் மூப்பர்களும் செய்யக்கடவர்கள் (மாற்கு 16 : 18 , அப்போ 28 : 8-9).ஒரு மனுஷனுடைய தலையிலே கைகளை வைத்து ஜெபிக்கும்போது கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை கனம்பண்ணும்விதமாக அவர்கள் மூலமாய் அவர்களுக்கு ஆசீர்வாதங்களைத் தருவார்.

**விசுவாசத்தின் தேவை**
சிலவேளைகளில் மற்றவர்களுடைய விசுவாசத்தின் பலனால் நமக்கு ஆசீர்வாதம். சில நேரங்களில் நம்முடைய விசுவாசமே நமக்கு பெலன்.முக்கியமானது யாதெனில் திடநம்பிக்கையும், விசுவாசமுந்தானே. இயேசுவின் சொந்த ஊரான நாசரேத்திலே அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை (மத் 13 : 58). கடுகு விதையளவு விசுவாசம் இருந்தால் மலையைப் பார்த்து அப்புறம் போ என்று சொன்னால் அது அப்புறம் போம் (மத் 17 : 20-21). சில நேரங்களில் கர்த்தர் அற்புதம் செய்யவில்லையெனில், நம்முடைய விசுவாசத்தில் தளர்ந்துபோகாமல் இன்னும் உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் தேவனை அதிகமாய் தேட வேண்டும்.

**நம்பிக்கையின் பெலன்**
அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி (சங் 103 : 3).நம்முடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் தளராமல் கர்த்தருக்குள் அதிகமாய் வளரும்போது நம் வாழ்வை பாதிக்கும் எல்லாம் நம்மை விட்டு அகன்றுபோம்.விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி 11 : 6).வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு எதிர்பார்ப்போடு கர்த்தரைத் தேடுவார்கள். பழைய ஏற்பாட்டின் நாட்களிலே, ஆசா தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான் (2 நாளா 16 : 12). கர்த்தர் அதை விரும்பவில்லை. தேவனிடத்தில் வருவதை கடைசியாக கொள்ளகூடாது.ஏனெனில் பரமபிதா தம் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைத் தரவே விரும்புகிறார்.நம்முடைய முழு மனதோடு கர்த்தரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்று விசுவாசித்து, அவரில் பயபக்தியாயிருப்போம். அவரால் மனஅமைதியும், சந்தோஷமும் அடைவோம்.

**நம்பிக்கையின் நிச்சயம்**
இந்த பூமியிலே இயேசுகிறிஸ்துவின் ஊழியமானது நொறுங்குண்ட இருதயத்தாருக்கும், வியாதியாய் கிடக்கிறவர்களுக்கும் அவர்கள்மேல் அவர்கொண்ட மனதுருக்கத்தால் (மத் 14 : 14) அவர்களில் அநேகரை சொஸ்தப்படுத்தினார். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்ககூடாத (எபி 4 : 15-16) மனரீதியான அல்லது மாம்சீக பெலவீனங்களையுடைய ஒருவர் தேவனுடைய கிருபைக்கு தம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அவருடைய அநுக்கிரகத்தை பெறலாம்.நம்முடைய ஆவிக்குரிய சரீரப்பிரகாரமான, மனரீதியான ஆலோசகராம் மேசியாவாகிய இயேசு, அவரைச் சார்ந்து அவரை விசுவாசித்து மேன்மை அடைவோம்.

# கேள்விக்கு என்ன பதில்?

**சுகவீனம் என்பது பாவத்தினாலோ? மீறுதலினாலோ வருகிறதா? அது தேவனிடத்திலிருந்து வருகிறதா அல்லது பிசாசினிடத்தில் இருந்தா வருகிறது?**

ஏதேன் தோட்டத்தில் மீறுதல் உண்டானபோது பாவ, சாபம் உருவாகி இவ்வுலகில் நோய்களும், பெலவீனங்களும் உண்டாயின.சரீர சுகவீனமும், மரணமும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு கூட இவ்வுலக வாழ்வில் விதிவிலக்கல்ல.சுற்றுசூழல் மாற்றங்களினாலோ அல்லது சரீர பெலவீனங்களாலோ பரிசுத்தவான்களும் கூட சுகவீனப்படுவதுண்டு.

ஒருவேளை மரணமே நிகழ்ந்தாலும் அவர்கள் தேவனுடைய நித்திய வாழ்வுக்குள் பிரவேசிப்பார்கள். சாத்தான் யோபை சோதித்ததைப் போன்ற சோதனைகளை கொண்டு வருவான். ஆனாலும் தேவனுக்குள் ஐக்கியமாயிருக்கிற நம்மை அது சேதப்படுத்தாது. தேவனும் கூட சிலவேளைகளில் நம் சரீரத்தில் சுகவீனத்தை அனுமதித்திருக்கலாம். தேவனோடு நெருங்கிச் சேரும்போது நம் பலவீனங்களால் நம்மை மேற்கொள்ள முடியாது. நமக்கு என்ன தேவை என்பதை அவர் எப்பொழுதும் அறிந்தவராயும் நிறைவேற்றுகிறவராயும் இருக்கிறார்.

யோவான் 9 : 1-11 ல் பிறவிக்குருடனுக்கு கர்த்தர் சுகம் கொடுத்ததை வாசிக்கிறோம். அதைக்கண்ட சீஷர்கள் இயேசுவிடம் இவன் குருடனாய்ப் பிறந்தது இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.இயேசு பிரதியுத்தரமாக : அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான்.

தேவநாமம் புறஜாதியாரிடத்தில் மகிமைப்படும்படியாக சில சுகவீனங்கள் அனுமதிக்கப்படுவதுண்டு.
2 கொரி 4 : 15-17 ல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாக கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு இவை யெல்லாம் உங்கள்நிமித்தம் உண்டாயிருக்கிறது. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.மேலும் காணப்படுகிற வைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கி யிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

**நம்பிக்கையோடிருக்கும் ஜனங்களின் மாம்சீக சுகவீனத்தை எப்போதும் அவர்களை விட்டு விலக்கி விடுதலையளிக்கிறவரா நம் கர்த்தர்?**

ஒவ்வொரு ஆத்துமாவையும் விடுவிக்கவே அவர் விரும்புகிறார்.அவர் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகளை கைவிடவோ அல்லது மறந்துவிடவோ எண்ணுவதில்லை. மேலும் அவர் மாம்சீக பெலவீனங்கள் யாவையும் விடுவிக்கும் விதமாய் வாக்குபண்ணவில்லை.ஆயினும் நாம் அவரை விசுவாசிப்பதிலும், நம்முடைய விருப்பங்களை அவரிடத்தில் தெரிவிப்பதிலும் எப்போதும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும்.

பவுலுடைய சரீரத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது (சோதனை, இன்னல் போன்ற ஒரு வேதனை அல்லது பெலவீனம்). அதை நீங்கும்படியாய் அவர் தேவனிடத்தில் வேண்டிக்கொண்டார். பலமுறை அதற்காக ஜெபித்தபோது, கர்த்தர் சொன்னது: என் கிருபை உனக்குப் போதும்; பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்; ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன் (2 கொரி 12 : 7-10).

நாம் தேவனுக்கு சித்தமானபடி விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்.அவருடைய வல்லமையை விசுவாசிக்க வேண்டும். உறுதியான உள்ளத்தோடும், எதிர்பார்ப்போடும் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும்.இந்த ஜெபத்திற்கு கர்த்தர் கொடுக்கும் பதிலை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய கிருபை போதும்.என் பெலவீனத்திலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும் என்று மனமகிழ்ச்சியோடே வாழ வேண்டும்.

**தேவன் பேரில் பற்றுதலாயிருந்து விசுவாசிப்பது மருத்துவ தலையீட்டிற்கு விலக்காக எண்ண வேண்டுமா?**

தேவபிள்ளைகளுக்கு கர்த்தர் அருளிய ஆசீர்வாதத்தின் ஈவுதான் குணமளித்தல்.மேலும் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதே அவருக்குப் பிரியானது.சில ஜனங்கள் மாம்சீக சுகவீனம் நீங்குவதில் மாத்திரமே விசுவாசத்தை எண்ணுவார்கள்.அது நற்காரியமல்ல. விசுவாசம் என்பது வாழ்வின் எல்லா தருணங்களிலும் தேவனோடு உள்ள ஐக்கியத்திலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியத்திலும் தேவவல்லமை வெளிப்படும்படியாய் இருக்க வேண்டும்.

ரோமர் 14 : 22-23 சொல்கிறது: உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும்.நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்.ஒருவன் சமுசயப்படுகிறவனாய் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான்.விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே.
வேதத்தில் சில காரியங்களைக்குறித்து முழுமையான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை.விசுவாசத்தின் தன்மையும், அளவையும் பொறுத்து தேவன் கிரியை செய்யும் விதம் ஒவ்வொருவருக்கும் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும்.வேதத்திலே நாம் வாசிக்கிற அநேக பரிசுத்தவான்களின் விசுவாசமானது, பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவை என்பது போல, விசுவாசத்தோடு கூடிய வைத்தியங்களால் குணப்படுவதுண்டு. அவ்வாறு மருத்துவ அல்லது மருந்துகளின் உதவி ஏதுமின்றி பிறருடைய கட்டாயத்தின்பேரில் சுகம் உண்டாகாது. விசுவாசத்தையும் , நம்பிக்கையையும் தேவன்பேரில் வைக்க வேண்டும்.நாம் சுகவீனப்பட்டாலோ அல்லது பலவீனமாக உணர்ந்தாலோ கர்த்தரைத் தேடுவோம். அவருடைய சித்தம் செய்வோம். கர்த்தர் நம் விசுவாசத்தைக் கனப்படுத்துவார்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY



உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்தஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் –1 கொரி 6 : 19–20.

சமச்சீரற்ற உணவுமுறைகளாலும், ஊட்டச்சத்து அதிக உடல் எடையினாலும் ஏறக்குறைய 678,000 இறப்புகள் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்கிறது.கடந்த 30 ஆண்டுகளில் உடல் எடை அதிகம் கொண்டோர் பட்டியலில், இளைஞர்களின் எண்ணிக்கை இருமடங்காகவும், குழந்தைகளின் எண்ணிக்கை மூன்று மடங்காகவும் வளரும் பிராயத்தினரிடையே 4 – மடங்காகவும் உள்ளது.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறபடியால், ஆரோக்கியமான உணவும் பழக்கவழக்கங்களைக் கடைபிடித்து வாழ பழகிக்கொள்வோம்.



ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

# இயேசுகிறிஸ்துவின் நாமம்

அப்பொழுது பேதுரு :வெள்ளியும், பொன்னும் என்னிடத்திலில்லை ; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொன்னர் – அப்போ 3 : 6.

தேவாலய வாசலண்டையிலே இருந்த சப்பாணியான ஒரு பிச்சைக்காரன் பேதுருவையும், யோவானையும் கண்டு பிச்சை கேட்டான்.அவர்களோ அவனை வலதுகையினால் பிடித்துத் தூக்கி, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி சுகம்பெற செய்தார்கள்.இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு அவர்களை நோக்கிப் பார்க்கிறதை அறிந்த பேதுரு நாங்கள் எங்கள் சுயசக்தியினாலோ, பக்தியினாலோ இவனை நடக்கச் செய்யவில்லை. இயேசுகிறிஸ்துவின் நாமமே இவனைப் பெலப்படுத்தினது என்றார்.



இன்றும் இயேசுகிறிஸ்துவின் மாட்சிமை பொருந்திய வல்லமையுள்ள மகத்துவ நாமத்தினாலே அற்புதங்களும், அதிசயங்களும் நடக்கின்றது. ஆகவே தான் நாமும் கூட பிதாவை நோக்கி மன்றாடி ஜெபிக்கும் போது இயேசுவின் நாமத்தினாலே என ஜெபித்து நிறைவு செய்கிறோம்.முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேடுவதிலும் தேவனுடைய அனுக்கிரகத்தைப் பெறவுமே இயேசுவின் நாமத்தைப் பற்றும் விசுவாசம் வேண்டும்.மாறாக வெறுமனே ஜெபத்தின் இறுதியில் சொல்லும் வெறும் வார்த்தை அல்ல அது.

இயேசுவின் நாமமேயல்லாமல் வேறெந்த நாமமும் கொடுக்கப்படவில்லை. மனுக்குலத்தைப் படைத்தவரும், இந்த உலகத்தை மீட்டவரும், சபையின் தலைவரும், இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தா, அல்பா ஓமேகாவும், ஆதியும் அந்தமுமான ஜீவனுள்ள ஒரே தேவனின் நாமத்தைச் சொல்லி அவரை அழைக்கின்றோம்.

இயேசுவின் நாமத்தைச் சொல்லும்போது சாத்தான் நடுங்குவான்.தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே வல்லமை பொருந்திய இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி, ஜெபிக்கும்போது அசுத்தஆவிகள் கட்டோடு துரத்தப்பட்டு ஓடிப்போகும்.ஆகவே நாம் திடநம்பிக்கையோடே அசுத்த ஆவிகளை எதிர்க்கலாம்.தைரியமாய் நம் இன்னல்களை மேற்கொள்ளலாம்.உலகின் இருளை விசுவாசத்தால் ஜெயிக்கலாம்.ஏனெனில் மரணத்தை ஜெயித்து, சத்துருவான சாபப்பிசாசை வென்ற இயேசுவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்கின்றோம். தேவனுடைய ஊழியக்காரரும், சுவிசேஷகர்களுமாகிய நாமும் கூட தோல்வியைக் கண்டு துவண்டு விடகூடாது.சுகமாக்குதலின் வல்லமையும்,கிருபையும் நம்முடையதல்ல.அது தேவனுடையது.நாம் முடிவை தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்போம்.

இயேசுவே நம் நம்பிக்கையின் காரணரும், பரிபூரணமான முடிவுமானவர்.பாவத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆத்துமாக்களுக்காக நாம் ஜெபிக்கும்போது நம்முடைய விசுவாசமும், நம்பிக்கையும் இன்னும் கர்த்தருக்குள் உறுதிப்படும்.இயேசுவின் நாமத்தினாலே அதிகாரத்தோடும் வல்லமையோடும் ஜெபிப்போம். பிணியாளிகளும், சுகவீனரும் தேற்றப்படவேண்டிய சூழலில், இயேசுகிறிஸ்துவின் வழியாக பிதாவை வேண்டிக்கொள்ளும்போது தேவன் விடுதலையளிப்பார்.நம் மனுஷீகம், பெலவீன பாத்திரமாய் இருந்தாலும், தேவனுடைய பிள்ளைகளானபடியால், இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கும்போது ஜெயம் பெறும் வல்லமையை பெற்றுள்ளோம்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

கர்த்தருக்கு பரிசுத்தம்

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316